விளம்பர கட்டணம்

முழுபக்கம் - 4000
அரைபக்கம் - 2000
கால்பக்கம் - 1000

விளம்பரம் மற்றும் இதழ் தொடர்புக்கு:
9443758068



# ஆதித்தமிழன்

மாதஇதழ்

நிறுவனர் இரா.அதியமான்

அறிவாயுதம்

AATHITHAMIZHAN ARIVAAYUTHAM

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடும் இதழ்

நிர்வாகிகள் பட்டியல் உள்ளே 3-ம் பக்கம்

வலைதளம் : www.aathithamizharperavai.com

தனிச்சுற்றுக்கு மட்டும் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஆடி - சூலை 10- 2014 | இதழ் - 36 | பக்கம் 4 | நன்கொடை ரூ.10







அரசு விடுதிகளில் சுகாதரமற்ற பாத்திரத்தில் தரமற்ற உணவு குப்பைதொட்டிக்கு போகும் காட்சி. இடம்: சென்னை மயிலாப்பூர், - நன்றி நக்கீரன்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவியருக்காக செயல்படும்

# அரசு விடுதிகள் தரம் உயர்த்தப்படவேண்டும்



விடுதியில் மாணவர்கள் போராட்டம்



## சேலத்தில் நடந்த பேரவை செயற்குழுவில் தமிழக அரசுக்கு அதியமான் கோரிக்கை

சேலம், அக். 1- ஆதித்தமிழர் பேரவை தலைமை சிறப்பு செயற்குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை 10.08.2014 அன்று நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் ரம்யவர்சினி திருமண மண்டபத்தில் பேரவை நிறுவனர் இரா.அதியமான் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச் செயலாளர் ஆ.நாகராசன், நிதிச்செயலாளர் ப.பெருமா வளவன், துணைப் பொதுச் செயலாளர் வே. மு.சந்திரன், உள்ளிட்ட தலைமை நிர்வாகி களும் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண் டனர். இதில் கீழ்கண்ட தீர் மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் : 1**

ஆதித்தமிழர் பேரவை மறு சீரமைப்பு 2014-க்கு பின் புதிதாக பொறுப் பேற்றிருக்கின்ற மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகளையும் பேரவையின் அணிகளான இளந்தமிழர் பேரவை (இளைஞரணி), மகளிர் பேரவை, மாணவர் பேரவை மற்றும் தொழிலாளர் பேரவை ஆகிய நிர்வாகிகளையும் தலைமைக்குழு வாழ்த்தி வரவேற்கின்றது.

மேலும் அவர்கள் அனைவரையும் இந்த செயற்குழு சிறப்பாக பணியாற்ற தமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் : 2**

எதிர் வரும் 2016-ல் நடைபெற வுள்ள சட்டப் பேரவை தேர்தலில் பேரவை பங்கெடுப் பதற்கான களத்தை தேர்வு செய்து, அதற்கான அனைத்து விதமான தயாரிப்புகளோடு கள மிறங்குவதென இந்த செயற்குழு தீர்மானிக்கிறது.

மேலும் வட மாவட் டங்களில் ஆதிதிராவிடர் களையும் (பறை யர்), தென் மாவட்டங்களில் தேவேந் திரர்களையும் (பள்ளர்) தவிர்த்து அருந்ததியர்கள் அங்கு போட்டியிட முடியாத நிலை எப்படி உள்ளதோ, அதேபோன்று மேற்கு மாவட்டங் களான கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட் டங்களில் அருந்ததியர்கள் பெரும் பான்மை யாகவும், அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கின்ற சக்தியாகவும் உள்ளதால்,



இங்கு அருந்ததியர்களை தவிர்த்து வேறு யாரும் போட்டியிட முடியாத நிலையை ஏற்படுத்திட வேண்டும், மேலும் மேற்கு தளத்தில் உள்ள தனி தொகுதி களில் அருந்ததியர்கள் மட்டுமே சட்டமன்ற உறுப் பினர்களாக சட்டப்பேரவைக்கு செல்ல வேண்டுமென இந்த செயற்குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 3**

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 மற்றும் சட்டத்திருத்தம் 2014 ஆகியவற்றை நீக்கவேண்டுமென்று சமூக நீதிப்பேரவை என்ற பெயரில் செயல்படுகின்ற பாட்டாளி மக்கள் கட்சியின் வழக்கறிஞர் திரு.பாலு அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

2-ம் பக்கம் பார்க்க

## ஆகஸ்டு -20 மாமன்னர் ஒண்டிவீரன் நினைவுநாளில் வீரவணக்கம் செலுத்த

# ஆதித்தமிழர்கள் படைதிரள்வோம்



## பேரவை நிறுவனர் அதியமான் அழைப்பு

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு-20- ல் மாமன்னர் ஒண்டி வீரன் நினைவுநாளில் பேரவை சார்பில் வீரவணக்கம் செலுத்தப் படுகிறது. அதேபோல் இந்த ஆண்டும் ஆதித்தமிழர்கள் மற்றும் பேரவை தோழர்கள் நெல்லை நெற்கட்டான் செவ்வயல் பாளையத்திற்கு அணிதிரள வேண்டுமென நிறுவனர் அதியமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மாமன்னர் ஒண்டிவீரன் நினைவு மணிமண்டபத்தில் தற்போது நிருவப்பட்டுள்ள அவரது உருவச்சிலையின் வடிவத்தை மாற்றி குதிரையில் வாளுடன் அமர்ந்துள்ளபடி சிலைநிருவப்பட வேண்டுமென தமிழக அரசை ஆதித்தமிழர்பேரவை கேட்டுக் கொள்கிறது.




ஆகஸ்டு மாதம் 10ம் தேதி ராசிபுரத்தில் நடந்த செயற்குழுவில் பேரவை நிறுவனர் அதியமான் உரையாற்றினார். உடன் பேரவை தலைமை நிர்வாகிகள்

*அருந்ததியர் மக்கள் விடுதலைக்கு கிடைத்திருக்கும் ஒரே ஆயுதம்*

# அதியமான் மட்டுமே; அதை எதிரிகள் யாரும் அழித்துவிட முடியாது

## சேலம் செயற்குழுவில் பொதுச்செயலாளர் நாகராசன் பேச்சு

ஆகஸ்டு மாதம் 10ம் தேதி ராசிபுரத்தில் நடந்த செயற்குழுவில் பொதுச் செயலாளர் நாகராசன் கலந்து கொண்டு பேசியது:- இந்நிகழ்விற்கு வந்து சிறப்பு செய்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு தோழர்களுக்கு சில கருத்துக்களை பதிவு செய்ய விரும்புகிறேன். தோழர்களே ஆதித்தமிழர் பேரவையின் முன்னணியினர் முதலில் தலைமை மீது நம்பிக்கை வைக்க வேண்டும், நம்பிக்கை ஒன்றுதான் இந்த மக்களை விடுவிப்பதற்கான உண்மையான லட்சியமாக இருக்கும். தலைமையை விமர்சிப்பது, ஏளனமாக பார்ப்பது என்றிருந்தால் அவர்கள் லட்சியவாதியாக இருக்க முடியாது வரலாறும் அதைத்தான் நமக்கு கற்றுத் தருகிறது.

தமிழினத்தலைவர் பிரபாகரன் உடன் இருந்த தளபதிகள் தலைமை மீது நம் பிக்கை வைத்தார்கள். அவர் போராட்டம் முன்னோக்கி சென்றது. இப்படித்தான் நெல்சன்மன்டேலா, பிடல்காஸ்ட்ரோ, மாவோ தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் இவர்கள் மீது உடன் இருந்த தளபதிகள் நம்பிக்கை வைத்தார்கள். இன்று வரலாற்றில் அழிக்கமுடியாத தலைவர்களாக இருக்கிறார்கள். மக்களுக்கு வழிகாட்டிகொண்டிருக் கிறார் கள்.

ஆனால் நமது தலைமையை நாம் எப்படி பார்க்கிறோம் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள் தோழர்களே! இந்த சமூகத்தின் விடுதலைக்கு கிடைத்திருக்கும் ஒரே ஆயுதம் அதியமான் மட்டுமே எனவே அவரை அழித்துவிட்டால் சமூகத்தையே அழித்து விடலாம் என்று எதிரிகள் திட்டமிடுகிறார்கள். அவர்களுக்கு துணையாக நம்மோடு இருப்பவர்களே துரோக மும் இழைக்கிறார்கள். இது இனத்துரோகம் என்று சொல்வதை விட வேறென்ன சொல்வது?

அருந்ததியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டுமென 25 ஆண்டுகளுக்கு முன் அதியமான் பேசியபோது அதை கேலி செய்தவர்கள் இன்று 3 சதவீத உள் ஒதுக்கீடு கிடைத்தபிறகு, திணறிப்போய் நின்கின்றனர்.

அதைபோல்தான் இப்போது அரசியலில் அதிகாரம் வேண்டுமென அதியமான் பேச தொடங்கியுள்ளார். அவர் தொடங்கும் போதே அதை முறியடித்தாகவேண்டும் என்ற அடிப்படையில் அதியமானை வீழ்த்துவதற் காக பல அவதூறு செய்திகளை பரப்புகின்ற னர். ஆகவே தோழர்களே நாம் எச்சரிக்கை யோடு பேரவையின் தலைமை மீது நம்பிக்கை வைப்போம் தலைமுறை விடுதலையை வென்றெடுப்போம் என்று பேசினார்.

*2016 சட்டமன்ற தேர்தலில் மேற்கு மாவட்டங்களில்*

# அருந்ததியர்கள் மட்டுமே போட்டியிடும் நிலையை உருவாக்க வேண்டும்

## சேலத்தில் நடந்த செயற்குழுவில் அதியமான் சூளுரை

ஆகஸ்டு மாதம் 10ம் தேதி ராசிபுரத்தில் நடந்த செயற்குழுவில் நிறுவனர் அதியமான் பேசியதாவது:- ஆதித்தமிழர் பேரவை தொட்டதெல்லாம் ஒவ்வொன்றாக வெற்றியடைந்து வருகிறது. உள் ஒதுக்கீடு பற்றி பேசினோம், ஒண்டிவீரனைப்பற்றி பேசினோம், தூய்மை தொழிலாளர்களைப்பற்றி பேசினோம். அது இன்று அரசால் கவனிக்கப்பட்டு வெற்றிபெற்று உள்ளோம். அதேபோன்று இப்போது அருந்ததியர்களுக்கான அரசியல் அதிகாரத்தைப் பற்றி பேசுகிறோம் அதில் கண்டிப்பாக வெற்றிபெறுவோம். ஆதித்தமிழர் பேரவை தோழர்கள் தலைமை இடுகின்றகட்டளைக்கு நிச்சயம் துணை நின்று வெற்றி வாகை சூடுவார்கள். என்பதில் எனக்கு எந்த அய்யப்பாடும் இல்லை.

தோழர்களே தென் மாவட்டங்களில் தேவேந்திரர்களும், வட மாவட்டங்களில் ஆதிதிராவிடர்களும், எப்படி தங்களை தவிர்த்து மற்ற தாழ்த் தப்பட்டவர்களை தனி தொகுதிகளில் போட்டியிட முடியாத நிலையை உருவாக்குகிறார்களோ, அதைப் போன்று நாமும் மேற்கு மாவட்டங்களில் அதாவது கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம், தர்மபுரி,திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள தனி தொகுதிகளில் அருந்ததியர்களை தவிர்த்து வேறு யாரையும் போட்டியிட முடியாத நிலையை உருவாக்கிட வேண்டும். அதற்கு தோழர்கள் ஒவ்வொரு அருந்ததியர்களையும் சந்தித்து உரையாட வேண்டும். மேலும் திருச்செங்கோடு, சங்ககிரி, பொள்ளாட்சி போன்ற தொகுதிகள் பொது தொகுதியாக இருந்தாலும் அங்கு நாமே வெற்றியை தீர்மானிக்கிறசக்தியாக இருக்கிறோம். எனவே அங்கு நாம் தனி கவனம் செலுத்தி களப்பணி யாற்ற வேண்டும். எதிர் வரும் 2016-ல் சட்டப் பேரவை தேர்தலில் பேரவை திமுக கூட்டணியில் இடம்பெற்று வெற்றிவாகை சூடி சட்டப் பேரவையில், பேரவையினர் இடம் பெறுவார்கள். இதற்கு பேரவை தோழர்கள் அனைவரும் ஒன்றினைந்து வெற்றிக்காக பாடுபட வேண்டும் என பேசினார்.

# அரசு விடுதிகளின் தரம்... 1-ம் பக்க தொடர்ச்சி

செய்துள்ளார். அந்த மனுவிற்கு எதிராக ஆதித்தமிழர்பேரவை தன்னையும் ஓர் பிரதிவாதியாக இணைத்துக்கொள்ளும் என இந்த செயற்குழு முடிவு செய்கிறது. மேலும் தமிழக அரசு தானே முன்வந்து தன்னையும் ஓர் பிரதிவாதியாக இந்த வழக்கில் இணைத்துக்கொள்ள வேண்டுமென தமிழக அரசை இந்த செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் : 4**

அருந்ததியர் மக்களுக்கான 3 சதவீத உள் இட ஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்தாமல் பல்வேறு விதமான நிர்வாக குளறுபடிகளை செய்து வரும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக நிர்வாகத்தின் அருந்ததியர் விரோத போக்கை கண்டித்தும், உள் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், மதுரை ஆட்சியர் அலுவலகம் முன்பு கடந்த 23-6-2014 அன்று ஆதித்தமிழர் பேரவை சார்பில் மாபெறும் கண்டன கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும், அருந்ததியர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 28-7-2014 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக முற்றுகை போராட்டத்தில் 150 மேற்பட்ட பேரவை தோழர்கள் கலந்து கொண்டு காவல்துறையினரின் கைது நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டும் தொடர்ந்து போராடியுள்ளது.

எனவே தமிழக அரசு இதில் சிறப்பு கவனம் செலுத்தி 3 சதவீத உள் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு உத்தரவிடமென தமிழக அரசை இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது. இதில் அருந்ததியர்களுக்கு உரிய நீதி கிடைக்காத பட்சத்தில் தொடர் போராட்டங்களை ஆதித்தமிழர் பேரவை முன்னெடுக்கும் என இந்த செயற்குழு முடிவு செய்கிறது.

**தீர்மானம் : 5**

அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டு சட்டத்திற்கு எதிராக தில்லி உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிற்கு எதிராக ஆதித்தமிழர் பேரவை சார்பில் தன்னையும் ஓர் பிரதிவாதியாக பேரவை நிறுவனர் அதியமான் அவர்கள் இணைந்துள்ளார்.

இதன் மூலம் அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டை பாது காப்பதில் ஆதித்தமிழர்பேரவை எல்லா விதமான சட்ட நடவடிக்கைகளிலும், சன நாயக பூர்வ நடவடிக்கைகளிலும் தொடர்ந்து ஈடுபடும் என இந்த செயற்குழு முடிவு செய்கிறது.

**தீர்மானம் : 6**

உள் இட ஒதுக்கீட்டு போராளி நெருப்புத் தமிழன் நீலவேந்தனின் நினைவு நாளான செப்டம்பர் 26 அன்று முதலாம் ஆண்டு நினைவேந்தல் வீரவணக்க நிகழ்ச்சி நடத்துவது எனவும், அவர் உயிர் ஈகம் செய்திட்ட திருப்பூரில் நினைவிடம் அமைப்பதெனவும் இந்த செயற்குழு முடிவு செய்கிறது.

**தீர்மானம் : 7**

உள் இடஒதுக்கீட்டு போராளி வீரத்தாய் ராணி அவர்களின் நினைவு நாளான நவம்பர் 26 அன்று முதலாம் ஆண்டு நினைவேந்தல் வீரவணக்க நிகழ்ச்சி நடத்துவது எனவும், அவர் உயிர் ஈகம் செய்திட்ட திருச்சியில் நினைவிடம் அமைப்பதெனவும் இந்த செயற்குழு முடிவு செய்கிறது.

**தீர்மானம் : 8**

ஆகஸ்டு-20 அன்று மாமன்னர் ஒண்டிவீரன் நினைவு நாளை போற்றுகின்ற விதமாக ஒவ்வொரு ஆண்டும் பேரவை சார்பில் நடைபெறும் வீரவணக்க அஞ்சலி நிகழ்விற்கு பெரும் திராளாக பேரவை தோழர்கள் நெல்லை நெற்கட்டான் செவ்வயல் பாளையத்திற்கு அணி திரள்வோம், அதேபோன்று இந்த ஆண்டும் (2014) பெரும் திரளாக அணிதிரள வேண்டுமென பேரவை தோழர்களை இந்த செயற்குழு வலியுறுத்துகிறது. மேலும் மாமன்னர் ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் தற்போது நிருவப்பட்டுள்ள அவரது முழு உருவச்சிலையின் வடிவத்தை மாற்றி குதிரையில் வாளுடன் அமர்ந்துள்ளபடி அவரது சிலையை நிருவப்பட வேண்டுமென தமிழக அரசை இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் : 9**

சிவகங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வீரமங்கை வேலுநாச்சியாரின் மணிமண்டபத்தில் அருந்ததிய வீரத்தாய் குயிலி அவர்களுக் கும் நினைவு சின்னம் எழுப்பியுள்ள தமிழக அரசை இந்த செயற்குழு நன்றியுடன் பாராட்டுகிறது.

**தீர்மானம் : 10**

அனைத்து மாநகராட்சி, நகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும், தூய்மை தொழிலாளர்கள் அனைவரும் கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களே!

இதேபோன்று தனியாருக்கு சொந்தமான மருத்துவமனைகள், விடுதிகள் (லாட்ஜ்), உணவகங்கள், திரைஅரங்குகள், பள்ளி,கல்லூரிகள் போன்றவற்றிலும், கழிவுநீர் அகற்றும் தனியார் ஊர்திகளில் பணியாற்றும் தூய்மை தொழிலாளர் களும் கையால் மலம் அள்ளும் தொழிலாளர்களே, என அரசு அங்கீரித்து அதற்கான கணக்கெடுப்பை அரசே நடத்தி அவர்களது குழந்தைகளின் கல்வி, வேலை வாய்ப்பு, கடனுதவி ஆகியவற்றில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாக செலவிடுவதோடு, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து கையால் மலம் அள்ளும் தொழிலார்களின் மறுவாழ்விற்கு வழிவகை செய்திடவேண்டும் என இந்த செயற்குழு மத்திய - மாநில அரசுகளை கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் : 11**


பள்ளி - கல்லூரிகளில் படிக்கின்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவியருக்காக செயல்படும் அரசு விடுதிகளின் (ஹாஸ்டல்) தரம் உயர்த்தப்படவேண்டும், கூடுதலாக விடுதிகள் கட்டப்படவேண்டும், மாணவ, மாணவியருக்கு ஒதுக்கப்படும் உணவு மற்றும் பராமரிப்பிற்கான நிதியின் அளவை உயர்த்தி வழங்கிட வேண்டுமெனவும், தமிழக அரசை இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது. மேலும் இதற்கான சிறப்பு மாநாடு ஒன்றை ஆதித்தமிழர் பேரவை சார்பில் விரைவில் நடத்துவது எனவும், இந்த செயற்மு முடிவு செய்கிறது.

**தீர்மானம் : 12**

அருந்ததியர்களின் உள் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதில் நடைபெறுகின்ற பல்வேறுவிதமான முறைகேடுகளை சரிசெய்கின்ற விதமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உள் ஒதுக்கீட்டு சிறப்பு தீர்மான பரிந்துரையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென தமிழக அரசு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.



சேலம் மாவட்டத்தில் நடந்த மறுசீரமைப்பு நேர்காணலின்போது நிறுவனர் உள்ளிட்ட தலைமை நிர்வாகிகள்.



விருதுநகர் மாவட்டம் ஒண்டிப்புலி பஞ்சாயத்து, கம்மாபட்டி கிராமத்தில் ஏற்பட்ட பட்டாசு விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிறுவனர் ஆறுதல்.

## பிஞ்சு மனசில் [சாதி] நஞ்சு

தமிழக அரசு 8-ம் வகுப்பு பாடபுத்தகத்தில் வளரும் இளமை என்ற நூலில் சாதி ரீதியான தொழில் என்றும் சக்கிலியர் செருப்பு தைப்பவர் என்றும் படத்துடன் பதிவிட்டு இருக்கிறார்கள். இந்த படம் மாணவ-மாணவிகளை பிஞ்சு நெஞ்சில் நஞ்சை திணிக்கின்ற விதமாகவும், அம்மக்களை அருந்தியர் மக்களை சிறுமைப்படுத்தும் விதமாகவும் உள்ளது. இப்போதுதான் அருந்ததியர் குழந்தைகள் கல்வி கூடங்களுக்கு சென்று படிக்கும் நிலை உள்ளது. எனவே இதனை உடனே தமிழக அரசும், கல்வித்துறையும் நடவடிக்கை எடுத்து அந்த பாடத்தை நீக்கிட ஆணைப்பிறபிக்கவேண்டும் என ஆதித்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.




### விடுதலை சிறுத்தைகள் கல்வி உரிமை மாநாட்டிற்கு

# அரசு 144 தடைஉத்தரவு அதியமான் கண்டனம்

ஆகஸ்டு 17 விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பிறந்த நாள் அன்று சேலத்தில் கல்வி உரிமை மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டை எப்படியும் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று ஆளும் அதிமுக அரசு 144 தடை உத்தரவு பிறப்பித்து நெருக்கடி கொடுத்தது. ஆனால் சென்னை உயர் நீதிமன்றம் அந்த தடையை நீக்கி கல்வி மாநாட்டிற்கு அனுமதி வழங்க வேண்டுமென தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. அதை தொடர்ந்து மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

அனைத்து தரப்பு ஏழை - எளிய மாணவர்களின் கல்வி உரிமைக்காக ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி உரிமை மாநாட்டை சாதி ரீதியான பார்வையில் தடுக்க முற்பட்ட தமிழக செயல் வன்மையாக கண்டிக்க தக்கது.

இதேபோன்று ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடுகின்ற அமைப்புகளின் போராட்டங்களை முடக்க நினைப்பது மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்களான மாமன்னர் ஒண்டிவீரன், தியாகி இமானுவேல் சேகரன் ஆகியோர்களின் நினைவு நாளில் அஞ்சலி செலுத்த திரளும் மக்களை அச்சமூட்டுகிற வகையில் தொடர்ந்து 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதை யும், வன்மையாக ஆதித்தமிழர் பேரவை கண்டிக்கிறது.

# பேரவையை வலுப்படுத்த மாவட்டம் தோறும் சீரமைப்பு பணி நடைபெற்றது

## மாவட்ட செயலாளர்கள் இறுதி பட்டியல்

ஆதித்தமிழர் பேரவையை வலுப்படுத்தும் நோக்கில் மாவட்டம் தோறும் சீரமைப்பு பணி நடைபெற்று முடிந்தது. முடிவடைந்ததை தொடர்ந்து கடந்த ஆகஸ்டு 10 ல் ராசிபுரத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழுவில் அறிவிக்கப்பட்ட இறுதிப்பட்டியல் விபரம்:-

### தலைமை நிர்வாகிகள்

பொதுச்செயலாளர் - ஆ.நாகராசன், நிதிச்செயலாளர் - பா.பெருமாவளவன், அமைப்புச்செயலாளர் - நிலுவை, தலைமை நிலையச்செயலாளர்- வீரவேந்தன், கொள்கை பரப்செயலாளர் -சுப.இளங்கோவன், துணைப்பொதுச் செயலாளர்கள் வே.மு.சந்திரன், செங்கைகுயிலி, வழக் கறிஞர் சுப.ஆனந்தன் ஆகியோரை தலைமை நிர்வாகிகளாக நியமனம் செய்யப்பட்டனர்.

### மாவட்ட செயலாளர்கள்

சேலம் மாநகர் மாவட்டத்திற்கு லோகநாதன், கிழக்கு மாவட்டத்திற்கு செல்வக்குமார், மேற்கு மாவட்டத்திற்கு ராதா கிருஷ்ணன்,

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு தமிழ்மாறன் மேற்கு மாவட்டத்திற்கு தமிழரசு,

ஈரோடு மாநகர் மாவட்டத்திற்கு அறிவழன், கிழக்கு மாவட்டத்திற்கு வீரகோபால்,

விருதுநகர் மாவட்டத்திற்கு மேற்கு மாவட்டத்திற்கு ஈஸ்வரன்,

மதுரை மாநகர் மாவட்டத்திற்கு ஆதவன், வடக்கு மாவட்டத்திற்கு விடுதலைவீரன், தெற்குமாவட்டத்திற்கு செல்வம்,

தேனி மாவட்டத்திற்கு வீரபாண்டியன்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு காளிராஜ், மேற்கு மாவட்டத்திற்கு விடுதலை

திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு ஆதிசக்தி , மாநகர் மாவட்டத்திற்கு ஆதவன்,

கோவை வடக்கு மாவட்டத்திற்கு கோதவாடி ராஜ், தெற்கு மாவட்டத்திற்கு ஆச்சிப்பட்டி கருப்புசாமி, மாநகர் மாவட்டத்திற்கு சிவா

கரூர் மாவட்டத்திற்கு முல்லையரசு ஆகியோர்கள் மாவட்ட செயலாளர்களாக அறிவிக்கப்பட்டனர். மேலும் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி வடக்கு , தூத்துக்குடிதெற்கு, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, பெரம்பலூர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு சீரமைப்பிற்கு பின் புதிய செயலாளர் அறிவிக்கப்படும் என ஆதித்தமிழர் பேரவை தலைமைக்குழு அறிவித்துள்ளது.

குறிப்பு: நியமனம் செய்யப்பட்ட பொறுப்பாளர்கள்

1. நடப்பு ஆண்டிற்கான உறுப்பினர் அட்டை.

2. ஆதித்தமிழன் இதழுக்கான குறைந்த பட்சம் ஆண்டு சந்தா.

3. நியமன கடிதம் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெற்ற பின்பே முகவரி அட்டை (விசிட்டிங்கார்டு) கடித புத்தகம் (லெட்டர் பேட்) அச்சிட அனுமதிக்கப்படுவர். அப்படி அச்சிடுவதற்கு முன்பாக அதன் வடிவத்தை தலைமைக்குழுவின் பரிந்துரையின் பேரில் இறுதி செய்யப்படும்.




செப்.26

நெருப்பு போராளி நீலவேந்தன் நினைவுநாள்

அணிதிரள்வோம்! திருப்பூருக்கு



கல்லூரி மாணவி காயத்திரி மரணத்திற்கு நீதி கேட்டு போராடியதற்காக காவல்துறை போட்ட பொய் வழக்கில் நாமக்கல் நீதிமன்றத்தில் ஆஜராகிவிட்டு (4.8.2014) பேரவை நிறுவனர் உள்ளிட்ட நிர்வாகிகள் நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்தபோது எடுத்த படம்.



16-7-2014 அன்று கரூரில் சீரமைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் ஆதித்தமிழர் மக்கள் கட்சியலிருந்து விலகி சுப.இளங்கோவன் பேரவையில் நிறுவனர் முன்னிலையில் இணைந்த காட்சி.

### சிவகங்கையில் வேலுநாச்சியார் மணிமண்டபத்தில்

# அருந்ததியர் பெண் போராளி குயிலிக்கு நினைவு தூண்

## ஆதித்தமிழர் பேரவை தமிழக முதல்வருக்கு பாராட்டு



*1772 ஆம் ஆண்டு சூன் 25 ஆம் தேதி சிவகங்கை மன்னர் முத்துவடுகநாத தேவருக்கும் காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் மன்னரும், அவரது இளையராணியுமான கௌரி நாச்சியாரும் பீரங்கி தாக்குதலுக்கு பலியானார்கள். இதனைத் தொடர்ந்து பட்டத்து ராணியான வேலு நாச்சியார் ஆங்கில படையிடமிருந்து சிவகங்கையை மீட்க திண்டுக்கல்லை அடுத்த விருப்பாட்சியில் கோபால நாயக்கரிடம் தஞ்சம் புகுந்தார்.*

*நாட்டின் மீது பற்று கொண்டவர்கள் விருப்பாட்சிக்கு சென்று வேலு நாச்சியாரைச் சந்திக்கலாம் என சிவகங்கையில் அறிவிக்கப்பட்டது. வீரம் செறிந்த ஆயிரக்கணக்கானோர் ஆண், பெண் என்ற பேதமின்றி விருப்பாட்சிக்கு சென்றனர். போர்களத்தில் பெண்களின் பங்கினை உருவாக்கும் புரட்சிக் கருத்தை கொண்ட வேலு நாச்சியார் அப்படைக்கு நாட்டுப்பற்று, அர்ப் பணிப்பு, நம்பிக்கை, வீரம் நிறைந்தவரைத் தேர்வு செய்யும் வகையில் தலைமையைத் தேடியபோது இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற அருந்த தியர் பெண் குயிலையை பெண்கள் படையின் தளபதியாக தேர்வு செய்தார்.*

*திண்டுக்கல்லில் இருந்த ஹைதர் அலியிடம் படை உதவிகளைப்பெற்ற வேலு நாச்சியார் 1780 ல் மருத்து சகோதரர்கள், நன்னி அம்பலம் தலைமையில் பெரும் படையுடன் சிவகங்கையை ஆங்கிலேயரிடமிருந்து மீட்கப்புறப்பட்டனர். மூன்று பிரிவுகளாக படைகளை அனுப்பி போரிட்டதில், சிவகங்கை யைத் தவிர்த்து மற்ற பகுதிகளை வேலு நாச்சியார் மீட்டார். சிவகங்கை அரண்மனை ஆங்கிலேயர் வசம் இருந்தத. இதனை மீட்க நவராத்திரி விழாவில் பெண்களுக்கு அரண்மனையில் உள்ள கோயிலுக்கு செல்ல அனுமதி அளிக்கப் பட்டிருப்பதை ராணியிடம் கூறி பெண்கள் படையினருடன் கோயிலுக்கு செல்வதைப் போலச் சென்று போரிடலாம் என வேலு நாச்சியாருக்கு யோசனை தெரி வித்தார்.*

*பெண்கள் படையுடன் பக்தர்களைப் போல நுழைந்த குயிலியின் படைத் தாக்கு தலைச் சமாளிக்க முடியாத ஆங்கிலேய படைத் தளபதி. அரண்மனையில் இருந்த ஆயுத கிட்டங்குகளில் உள்ள துப்பாக்கிகளைத் கொண்டு விடுதலை போராளிகள் மீது தாக்கு தலுக்கு உத்தரவு பிறப்பித்தார். உடனே வாள்களையும், வளரிகளை யும் கொண்டு போரிட்டு வெல்ல முடியாது என்று உணர்ந்த குயிலி அரண்மனை ஆலயத்தில் விளக்கேற்றுவதற்காக வைத்திருந்த எண்ணெய்யை உடலில் ஊற்றி தீ வைத்து கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்கியில் குதித்து அவற்றை அழித்து தானும் உயிர்நீத்தார். இந்த வீர செயலை போற்றும் வகையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் வேலு நாச்சியருக்கு மணி மண்டபமும், படை திளபதி குயிலிக்கு நினைவு தூணை கட்ட உத்தரவிட்டது.*

*அருந்தியர் பெண் குயிலி வீரசெயலை போற்றும் வகையில் அவருக்கு நினைவு தூண் அமைக்க உத்தரவிட்ட தமிழக முதல்வருக்கு ஆதித் தமிழர் பேரவை பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து கொள்வதோடு*

*நெல்லையில் அமைந்துள்ள மாமன்னர் ஒண்டி வீரனுக்கு மணிமண்டபத்தை விரைவில் கட்டி முடிக்க ஆதித் தமிழர்பேரவை கேட்டுக் கொள்கிறது.*





செப்.26 திருப்பூரில் அருந்ததியர்களின் உள் இட ஒதுக்கீட்டிற்காக உயிர்நீத்த நெருப்புபோராளி நீலவேந்தனுக்கு முதலாம் ஆண்டு வீரவணக்க நினைவு நாளையொட்டி பேரவை தோழர்கள் எழுதியுள்ள சுவர்விளம்பரம்

# புதிய நிர்வாகிகளுக்கு நிறுவனர் வாழ்த்து செய்தி


*ஆதித்தமிழர் பேரவையில் புதியதாக பொறுப்பேற்றுக்கொண்டுள்ள தலைமை நிர்வாகிகளையும், மாவட்ட ஒன்றிய நிர்வகிகளையும் மற்றும் அணிகளின் நிர்வாகிகயையும், வாழ்த்தி வரவேற்கிறேன்.*

*மேலும் தாங்கள் ஆற்றிய, ஆற்றவிருக்கின்ற அருந்ததியர் மக்களுக்கான உரிமைப் போராட்டகளத்தில் தொடர்ந்து ஊக்கத்தோடும், உண்மையான உணர்வோடும் தலைமை கட்டுப்பாடோடும் செயலாற்ற எனது நெஞ்சார்ந்த புரட்சிகர வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

## ஆதித்தமிழர் பேரவை தலைமை நிர்வாகிகள் பட்டியல்



**ஆ.நாகராசன்**
பொதுச்செயலாளர்




**ப.பெருமாவளவன்**
நிதிச்செயலாளர்



**வீரவேந்தன்**
தலைமைநிலையசெயலாளர்




**சு.ப.இளங்கோவன்**
கொள்கைபரப்பு செயலாளர்



**வே.மு.சந்திரன்,**
துணைசெயலாளர்



**செங்கை குயிலி,**
துணைசெயலாளர்



**ச.சு.ஆனந்தன்**
துணைசெயலாளர்

### மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில்

# உள் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தக்கோரி அருந்ததியர் கூட்டமைப்பினர் முற்றுகையிட்டு கைது

*28.7.2014 அன்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அருந்ததியர் உள்இட ஒதுக் கீட்டை முறையாக நடைமுறைப்படுத்திட வேண்டு மென வலியுறுத்தி காமராசர் பல்கலைக் கழக வளாகம் முன்பாக அருந்த தியர் கூட்டமைப்பு சார்பில் ஆதித் தமிழர் பேரவை, அருந்த மிழர் விடுதலை இயக்கம், தமிழ்ப்புலிகள், ஆதித்தமிழர் மக்கள் கட்சி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்ன ணியினர் சார்பில் கல்லூரியை முற்றுகை போராட்டம் நடைபெற்றது. இதில் கண்டன முழக்கம் எழுப்பினர். இதனால் பதற்றம் நிலவியது. இதை போக்க கல்லூரி வளாகம் முன்பு பலத்த காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடு செய்திருந்தது.*

*இதில் பேரவை சார்பில் மாநில அமைப்பு செயலாளர் விடுதலை வீரன் மற்றும் மாவட்ட பொருப்பாளர்கள் மற்றும் அருந்ததியர் அமைப்பின் தலைவர்கள் ஆதிதமிழர் மக்கள் கட்சியின் தலைவர் கல்யாணசுந்தரம், தமிழ்புலிகள் அமைப்பின் பொதுச்செயலாளர் நாகை திருவள்ளுவன், அருந்தமிழர் விடுதலை இயக்க தலைவர் சக்கையன் ஆகியோர் கலந்து கொண்டு முற்றுகை போராட்டம் நடத்தினர். இதில் ஏராள மான பேரவை தோழர்கள் கலந்து கொண்டு கைதா கினர்.*

Printed: Publisher and Editor R.Athiyamaan, No.713, Mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2. Mobile: 94430 84642.
Meenakshe Offset Printers, 7, Sonaiyar Koil Street, 4th P.T.R. Road, Madurai-625 002. Off: 0425-2524731, Cell: 75981 94731

வெளிடுபவர்: இரா.அதியமான், 713, மேட்டுப்பாளையம் சாலை, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-2. கைபேசி: 94430 84642
அச்சிடுவோர்: மீனாட்சி ஆப்செட் பிரிண்டர்ஸ், 7 சோணையர்கோவில்தெரு, 4-வது பி.டி.ஆர்.சாலை, மதுரை-2. தொலைபேசி: 0452-2524731
மின் அஞ்சல் தொடர்புக்கு : adhiyamaanperavai@gmail.com பேரவை செய்திகளை பார்க்க வலைதளம் :www.aathithamizharperavai.com